தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# சிறப்புக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 6(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சிறப்புக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்

1) இம்மாநகராட்சிக்குச் சொந்தமான ரோச் விக்டோரியா பூங்காவில் அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவிக்கொள்ள தூத்துக்குடி நகரை அழகுபடுத்தும் குழுவிற்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 157 நாள் 22–10–2008இல் அனுமதி அளிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி பூங்காவில் அண்ணல் மகாத்மா காந்தி அவர்களின் சிலையினை நிறுவுவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்தும் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அன்னாரின் திருவுருவச் சிலையினை நகரில் மாற்று இடத்தினை தேர்வு செய்து போக்குவரத்திற்கு இடையூறின்றி நிறுவுவதற்கு மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்: 173**

மாமன்ற தீர்மானம் எண் 157 நாள் 22.10.2008 ரத்து செய்யப்பட்டு, அண்ணல் மகாத்மாகாந்தி அவர்களின் திருவுருவச் சிலையினை நகரில் போக்குவரத்திற்கு இடையூறின்றி நிறுவுவதற்கு மாற்று இடம் தேர்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

**மாமன்றம், தூத்துக்குடி**
**நாள் 24–11–2008**

**மேயர்,**
**மாமன்றம், தூத்துக்குடி**